# ஆண்டவரின் விண்ணேற்றம்

## பாஸ்காக் காலத்தின் 7 ஆம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு A

**இன்றைய வாசகங்கள்:**

திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம் 1: 1-11,

திருப்பாடல் 7: 1-2. 5-6. 7-8,

திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1: 17-23,

மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 28: 16-20

## திருப்பலி முன்னுரை:

**"இதோ! உலக முடிவு வரை**
**எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்."**

விண்ணகத்துக்குரியவர்களே, ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்றப் பெருவிழா திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்வு அடைகிறோம். மரணத்தை வெற்றி கொண்டு உயிர்த்தெழுந்த இறைமகன் இயேசு, நாற்பது நாட்கள் தனது சீடர்களை சந்தித்து உறுதிபடுத்திய பின்பு விண்ணேற்றம் அடைகிறார். இந்த உலகை விட்டு செல்லும் முன், எந்நாளும் நம்மோடு இருப்பதாக அவர் வாக்களித்திருக்கிறார். தந்தையாம் இறைவனின் மாட்சிக்காக, தூய ஆவியாரின் துணையோடு கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ நாம் அழைக்கப்படுகிறோம். முதல் கிறிஸ்தவர்களைப் போன்று, ஆண்டவரின் மாட்சியை உலகெங்கும் பறைசாற்ற நினைவூட்டப்படுகிறோம். கிறிஸ்து இயேசுவின் அதிகாரத்தை பயன்படுத்தி மக்கள் அனைவரையும் அவரது சீடர்களாக்கும் ஆர்வத்துடன் பணியாற்ற, இத்திருப்பலியில் நாம் வரம் வேண்டுவோம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**எல்லாம் வல்லவரே இறைவா,**

திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் உமது திருமகனின் உயிர்ப்பு, விண்ணேற்றம் ஆகியவற்றின் நற்செய்தியை உலக மக்கள் அனைவருக்கும் வழங்க உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**விண்ணில் வாழ்பவரே இறைவா,**

மண்ணக இன்பங்களுக்கு அடிமையாகி, விண்ணக வாழ்வைப் பற்றிய சிந்தனையின்றி வாழ்கின்ற மக்கள் அனைவரும், உமது திருமகனின் உயிர்ப்பிலும் விண்ணேற்றத்திலும் உம்மைக் கண்டுணர உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**புதுமைகளின் நாயகரே இறைவா,**

எங்கள் ஆண்டவர் இயேசு விண்ணுலகிலும், மண்ணுலகிலும் கொண்டிருக்கும் அதிகாரத்தால், உலக மக்களின் உடல், உள்ள, ஆன்ம நோய்களை குணமாக்கும் பணியை திருச்சபை ஆர்வமாக செய்ய உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**ஆபத்துகளிலிருந்து எம்மைக் காத்து வழிநடத்திடும் எம் இறைவா!**

தொற்று நோயின் தாக்கத்திலிருந்து உலக மக்கள் அனைவரையும் காத்திடப் போராடும் மருத்துவர்கள், செவிலியர்கள் அவர்களுடன் இணைந்துப் பணியாற்றும் அனைவரையும் காத்து வழிநடத்திவும், அவர்கள் உடலும் உள்ளமும் உறுதியுடன் இருக்கவும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**மருத்துவருக்கெல்லாம் மருத்துவராம் எம் இறைவா!**

விரைவில் இந்த தொற்று நோய் முழுமையாக நீங்கிட வேண்டிய மருத்துவத்தை எமக்கு தந்து, அனைவரும் விரைவில் குணமடையவும், மரணம் அடைந்தவர்களின் குடும்பங்கள் ஆறுதலடையவும், நோயிக்கு எதிராகப் போராடும் மருத்துவ உலகம் அதில் வெற்றிபெறவும் உமது அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**அன்பின் தந்தையே! எம் இறைவா!**

உம் மக்கள் இன்றைய சூழலில் வயது முதிர்ந்தவர்களை பேணி காக்கும் நிலைமாறி, முதியோர் இல்லங்கள் பெறுகிவரும் நிலையில் அவர்களுக்கு நீர் தந்தையாகவும், தாயாகவும் நின்று, தாங்கள் கடந்து வந்த பாதையைக் குறித்து அவர்கள் துன்புறும் வேளையில் அவர்களுக்கு அன்பினை பொழிந்து அரவணைத்தும் நல்ஆயனாக இருந்து வழி நடத்திட வரம் வேண்டி இறைவா உமை மன்றாடுகிறோம்.

**குழந்தைகள் விண்ணரசின் செல்வங்கள் என்று மொழிந்த எம் இறைவா!**

நீர் கொடுத்த செல்வங்களாகிய எங்கள் பிள்ளைகளை நாங்கள் பொறுப்புடன் வளர்க்கவும், அவர்களுக்கு இறை அச்சத்தையும் தூய வாழ்வுக்கான சிந்தனைகளை அறியச் செய்திடவும், தம் கடமைகளை உணர்ந்துத் தூயக் கிறிஸ்துவ வாழ்வு வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.